அன்பான வாடிக்கையாளர்களே

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனத்தின் கீழ் வருகின்ற தேவைப்படுத்தலொன்றினை அநுசரித்து உங்களுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான வங்கித் தொழில் உற்பத்திகளை / சேவைகளை தெரிவுசெய்வதற்காக உங்களுக்கு உதவுவதற்கு முனைகின்ற முக்கிய விடய ஆவணங்களைக் கொண்ட தொகுதியொன்றினை நாம் தயாரித்துள்ளோம்.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் தனிப்பட்ட வங்கித்தொழில் வாடிக்கையாளர்களுக்காக கிடைக்கப்பெறுகின்ற கணக்குடன் தொடர்புபட்ட விசேட பொதிகள் மற்றும் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளுடனும் சேர்த்து வேறுபட்ட வகையான இலங்கை ரூபாய் கணக்குகள் பற்றிய விரிவான விபரங்களை முக்கிய விடய ஆவணம் உங்களுக்கு தருகின்றது.

எனினும், சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்களுக்கும் வங்கியின் கொள்கைகளில் அத்துடன் நடைமுறைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் அமைவாக முக்கிய விடய ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் திருத்தத்திற்கு உட்படும் என்பதனை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

நீங்கள் மேலதிகத் தகவல்களை அறிந்துகொள்வதற்கு விரும்புவீர்களாயின் பின்வரும் வழிகள் ஊடாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள் www.nationstrust.com அல்லது 24 மணி நேர அழைப்பு நிலையம் 011 4626262

கீழே தரப்பட்டுள்ள எவையேனும் உங்கள் கணக்குகள் தொடர்பில் உங்களிடம் ஏதேனும் முறைப்பாடு இருக்குமெனில் தயவுசெய்து முறைப்பாட்டு அறிவித்தலை உள்ளடக்குகின்ற எழுத்திலான சுருக்கமான அறிக்கையொன்றினை முறைப்பாடுகள் தீர்மான அலுவலர், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, இலக்கம் 242, யூனியன் பிளேஸ், கொழும்பு – 02 என்ற முகவரிக்கு அனுப்புங்கள் அல்லது தொலைபேசி வாயிலாக ஜ94(0)11 4711411]/ [customerservice@nationstrust.com] என்ற மின்னஞ்சல் ஊடாக எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள், உங்களுக்கு நாம் விரைவாக பதிலளிப்போம்.

| கணக்கு பற்றிய விபரம் | வாடிக்கையாளர்களுக்கான நன்மைகள் | கட்டணங்கள் மற்றும் வேறு வங்கி அறவீட்டு வகைகள் | கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | முக்கிய நியதிகளும் நிபந்தனைகளும் |
|---|---|---|---|---|
| **இ) சிறுவர்கள் கணக்குகள்** | | | | |
| **நேஷன்ஸ் கிட்ஸ் சேமிப்புக் கணக்கு**<br><br>இக் கணக்கு 18 வயதுக்கு கீழ்ப்பட்ட ஒருவர் சார்பில் பெற்றோர் ஒருவரினால் அல்லது பாதுகாவலரினால் ஆரமபிக்கப்படக் கூடியது. | - முன்னுரிமை வட்டி வீதம்<br>- மீதியின் அடிப்படையில் பரிசுகள் | கணக்கு மூடுதல் கட்டணங்கள் | உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட கிட்ஸ் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கும் படிவம் பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து ஏதேனும் வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:<br>- பார்ப்பதற்காக வங்கியின் மூல பிறப்புச் சான்றிதழ்<br>- பெற்றோரின்/ பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி / செல்லுபடியான கடவுச் சீட்டுப் பிரதி<br>- வதிவிட முகவரி, தேசிய அடையாள அட்டையில் அல்லது கடவுச் சீட்டில் இருந்து வேறுபடுமாயின் முகவரியினை உறுதிப்படுத்துவதற்கு ஆவண ரீதியான சான்று அவசியமாகும். | - இலங்கைப் பிரசைகளாகவுள்ள 18 வயதுக்கு கீழ்ப்பட்ட பிள்ளையின் பெற்றோர்/பாதுகாவலர் பிள்ளையின் சார்பில் கணக்கொன்றினை ஆரமபிக்கலாம்.<br>- இக்கட்டான தேவைப்பாடுகளுக்காக மாத்திரம் அதாவது செல்லுபடியான ஆவணத்தின் அடிப்படையிலும் வங்கியின் ஏக தற்றுணிபிலும் கல்வி மற்றும் மருத்துவ தேவைகளுக்காக மீளெடுப்புகள் அனுமதிக்கப்படும்.<br>- 18 வயதினை அடைகின்ற போது, ஒன்றில் நிதியங்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ள விடுவித்துக் கொள்ள அல்லது பொருத்தமானவிதத்தில் ஏதேனும் வயதுவந்தோர் கணக்காக மாற்றுவதற்கு பாராயமடையாதவர் உரித்துடையவராவார் |